# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :26 April 2025*
கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ˙த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
முனைவர் ஹ.விஜயலட்சுமி

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
ப.பிரபு

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
சா.ஜனார்த்தனன்

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
திருமதி நா.நித்யா

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
கி. ராஜ்குமார்

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
முனைவர் மௌ.அஸ்கர் அலி

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
முனைவர் நா. ஜிதேந்திரன்

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
ரா.சந்தியா

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
ரா.ஹேமா சிவகா

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்
ந.மஞ்சுளா

மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்
பத்மினி. S

EASY LEARNING TECHNIQUES
PROF. Dr. Er. S. HARI PRASAD

Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools
Kanapathipillai Gnanaretnam

A Comparative Study Of Formal And Non-formal Education Systems
Shiyani Thevaruban

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு

The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu
P.PRAVEENKUMAR

Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums
Dr. S.Udhaya Kumar.

தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்
முனைவர் செ. சாந்தி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்

# *Course Differences In The Tolkappiyam Extracurricular Activities Department*

**ஆய்வாளர்**

**கு.செந்தமிழ்செல்வி**

*(Ref.No:25806/Ph.D.K8/Tamil/FT/April 2018/Confirm.Dt:19.04.2021)*

**தமிழ்(***CDOE)***முனைவர்பட்டஆய்வாளர்**

**தமிழியல்துறை**

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

**திருச்சிராப்பள்ளி —** *620 024*

**நெறியாளர்**

முனைவர் **தே.வீ.சுமதி**

**உதவிப்பேராசிரியர்—**

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

**திருச்சிராப்பள்ளி —** *620 024*

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்மொழி மிக நீண்ட இலக்கிய இலக்கண வரலாற்றைக் கொண்டது. உலக மொழிகளுள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள இலக்கண மற்றும் மொழியியல் நூல்களில் காலத்தால் முதன்மையானது எனவும் பொருண்மையால் முழுமையானது எனவும் கருதப்படக்கூடியது தொல்காப்பியம். பொதுவாக தொல்காப்பித்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் தொல்காப்பியர் காலத்தினும் மிகவும் பிற்பட்டவர்களாயினும் தொல்காப்பிய நூற்பாக்களுக்கு இயன்றளவு பொருளுணர்ந்து உரையெழுதியுள்ளனர். ஆயினும் தொல்காப்பிய நூற்பாக்களில் பல்வேறிடங்களில் உரையாசிரியர்களின் பாடவேறுபாடுகளும் உரை வேறுபாடுகளும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. இளம்பூரணர் உரையை முதன்மையாகக் கொண்டு நச்சினார்க்கினியரின் உரையை ஒப்பிட்டு ஆராயும்போது இளம்பூரணர் கூறியுள்ள நூற்பாக்களில் நச்சினார்க்கினியர் சில பாடவேறுபாடுகளைச் கையாண்டுள்ளமையை பெறமுடிகிறது. அவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் புறத்திணையியலில் உள்ள வெட்சித் திணை நூற்பாக்களில் நான்கு இடங்களில் பாடவேறுபாடு அமைந்துள்ளது. எனவே அப்பாடவேறுபாடுகள் பற்றியும் அதனால் தோன்றும் உரை வேறுபாடுகள் பற்றியும் ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

*Abstract*

*The Tamil language has a very long literary and grammatical history. Among the grammatical and linguistic texts available to us in the world's languages to this day, the Tolkappiyam is the oldest in terms of time and the most complete in terms of*

*content. This book is the first complete grammar book available in Tamil. The commentators who wrote the Tolkappiyar treatise, although they were much later than the Tolkappiyar period, have written the treatise with understanding of the Tolkappiyar texts. However, in some places in the Tolkappiya texts, there are differences in the lyrics and textual differences between the authors. Nachinarkiniyar, who primarily uses the text of Ilampuranar, While comparing the text, Nachinarkiniyar has dealt with some differences in the texts mentioned by Ilampuranar. Thus, in four places in the Vetchi Thinai texts in the Purathinaiyiyal of the Tolkappiyam, There is a difference in tone. This article examines the differences in tone and the textual differences that arise from them.*

**திறவுச்சொற்கள்**

மூலபாடம் ,பாடவேறுபாடு,வெட்சித்திணை,குடிநிலை , மரபு

*Keywords: source material , Distinction ,* Vetchi Thinai.*Civil status, Heritage*

**முன்னுரை**

தொல்காப்பியம் தமிழில் கிடைத்த முதல் நூலாகவும் இலக்கண நூலாகவும் திகழ்கின்றது. இந்நூலுக்கு பிறகு எழுதப்பட்ட அனைத்து இலக்கண நூல்களுக்கும் மூலமாக விளங்குவது தொல்காப்பியமாகும். இக்காலகட்டத்தில் தொல்காப்பியத்தை முழுவதுமாக படிப்பதற்கும் அதன் பொருளை புரிந்து கொள்வதற்கும் உரைகளே பேருதவி புரிகின்றன. தொல்காப்பியம் தோன்றிய காலம்தொட்டே அதற்கு பல உரைகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வுரைகள் யாவும் உரையாசிரியர்களின் கருத்திற்கு ஏற்பவும் அவர்கள் வாழ்ந்த காலச் சூழலுக்கு ஏற்பவும் பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. அவ்வகையில் தொல்காப்பியப் புறத்திணைகளில் ஒன்றான வெட்சித் திணையில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளில் காணப்படும் பாடவேறுபாடுகளையும் அவற்றினடிப்படையிலான உரை வேறுபாடுகளையும் இவ்விரு உரையாசிரியர்களையும் பின்பற்றி உரைகண்ட பிற உரையாசிரியர்களின் உரைகளையும் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**புறத்திணையியல் பெயர்க்காரணம்**

அகம், புறம் என்பன காரணப்பெயர்களாகும். அவற்றுடன் திணை, இயல் என்னும் சொற்கள் புணர்ந்து அகத்திணையியல், புறத்திணையியல் என்றாகின்றன. இவ்வாறு அமைந்துள்ள புறத்திணையியலின் பெயர்க்காரணத்தை விளக்கும் இளம்பூரணர் '**இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின் புறத்திணையியல் என்னும் பெயர்த்து. இது புறப்பொருள் உணர்த்துதலாற் பெற்ற பெயர்**' (தொல்.பொருள்.புறம்.இளம்.ப.71) என்று குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியர் '**இவ்வோத்து முற்கூறிய அகத்திணை ஏழற்கும் புறமாகிய புறத்திணையிலக்கணம் உணர்த்தினமையிற் புறத்திணையியலென்னும் பெயர்த்தாயிற்று**' (தொல்.பொருள்.புறம்.நச்சர்.ப.124) என்று குறிப்பிடுகிறார்.

இவ்விரு உரையாசிரியர்களும் அகத்திற்குப் புறமான புறம் குறித்துப் பேசுவதால் இவ்வியல் புறத்திணையியல் எனப் பெயர் பெற்றது என ஒத்தக் கருத்துடையவர்களாய் விளக்குகின்றனர்.

**அகத்திணைகளுக்குப் புறமாகும் புறத்திணைகள்**

தொல்காப்பியம் புறத்திணை ஏழு என்று வரையறுக்கின்றது. அவை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவாகும். அவை, நிரலே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய அகத்திணைகளைப் புறமாகக் கொண்டுள்ளன. இக்கருத்தை,

**வெட்சி தானே குறிஞ்சியது புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.1:3)**
**வஞ்சி தானே முல்லையது புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.6:1)**
**உழிஞை தானே மருத்த்துப் புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.8:1)**
**தும்பை தானே நெய்தலது புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.12:1)**
**வாகை தானே பாலையது புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.15:1)**
**காஞ்சி தானே பெருந்திணைப் புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.18:1)**
**பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே (தொல்.பொருள்.புறம்.இளம்.20:1)**

என்ற புறத்திணையியல் நூற்பாக்களின்வழிப் பெறமுடிகிறது.

**மூலபாடம்**

மூலபாடம் என்பது பொதுவாக முதல் நூலாசிரியரால் எழுதப்படுவதாகும். அதாவது எந்தவொரு நூலின் வழி நூலாகவும், சார்பு நூலாகவும் அமையாமல் முதன்மை நூலாகவே அமையக்கூடியது. அவ்வாறு தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் முதல் நூலாகவும் மூலநூலாகவும் கருதப்படுவது தொல்காப்பியம்.

“மூலநூலாசிரியர் எழுதிய ஏடு மூலப்பிரதி” (Original) (அ.விநாயகமூர்த்தி.மூலபாட ஆய்வியல்.பக்.06) என மூலபாடம் பற்றிக் கூறப்படுகிறது.

மூலபாட ஆய்வு (Textual Criticism) என்ற தொடர் முதன்முதலில் கி.பி 1748-ல் வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில்தான் கையாளப்பட்டுள்ளது. அதில் மூலபாட ஆய்வு என்ற தொடருக்கு “ஆசிரியரால் இயற்றப்பட்ட மூலத்தில் பிற்காலத்தில் நிகழ்ந்த மாசுகளை நீக்கி அம்மூலத்தின் உண்மையான பொருளை நிச்சயித்து மூலத்தை நிலைபெறுத்துதல்” (அ.விநாயகமூர்த்தி.மூலபாட ஆய்வியல்.பக்.12) என விளக்கம் தரப்பட்டுள்ளது.

**பாடவேறுபாடு**

பாடவேறுபாடு என்பது மூலபாடத்தில் இருந்து எழுத்தாலும் சொல்லாலும், பொருளாலும் வேறுபட்டு நிற்பதாகும். பாடவேறுபாடு பற்றி பலரும் பல காலகட்டங்களில் ஆராய்ந்துள்ளனர் என்பதை **பாடவேறுபாடு என்பது பாட்டின் வடிவம் பற்றியதோர் கூறுபாடு.(**திருக்குறள் ஆராய்ச்சி-1, யாப்பு அமைதியும் பாடவேறுபாடும், நூன்முகம்.VIII) என்றவாறும் ”**பாடலின் கருத்தை மாற்றுவதாகவோ, தொடரின் பொருட்போக்கை திருப்புவதாகவோ அமைவது பாடவேறுபாடு ஆகும்**”(மூலபாட ஆய்வியல்,பக்.32) என்றவாறும் அமைந்துள்ள விளக்கங்களினின்றும் அறியமுடிகிறது.

**திணை துறை விளக்கம்**

ஒருவரின் புற செயல்பாடுகளான வீரம், கொடை, புகழ் ஆகியவற்றிற்கான இலக்கணத்தைக் கூறுவது புறத்திணையியலாகும். பன்னிருபடலமுடையார் புறத்திணைகள் பன்னிரண்டெனக் கூறுவர். அதில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, தும்பை என்னும் ஏழும் மறத்துறை பற்றிய புறம் எனவும் வாகை, பாடாண், பொதுவியல் ஆகிய மூன்றும் புறப்புறம் எனவும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் அகப்புறம் எனவும் பகுத்துரைப்பர். இதில் தொல்காப்பியத்தின் புறத்திணையியலில் **வெட்சி, வஞ்சி, தும்பை, உழிஞை, வாகை, காஞ்சி, பாடாண்** ஆகிய ஏழும் பல துறைகளைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன.

**வெட்சித் திணையும் துறைகளும்**

வெட்சிப் பூவினைச் சூடி மாற்றாரின் ஆநிரைகளைக் கவர்ந்து வருவது வெட்சித்திணையாகும். இது மண்ணுறு தொழில், தன்னுறு தொழில் என இருவகைப்படும்.

கரந்தைத் திணையாகிய மாற்றார் கவர்ந்து சென்ற ஆக்களை மீட்டலும் வெட்சித் திணையின்பாற்படும்.

வெட்சித் திணையில் இளம்பூரணர் கூறியுள்ள துறைகளில் நச்சினார்க்கினியர் நான்கு துறைகளில் பாட வேறுபாடு அமைத்துள்ளார். அவை, **நுவல்வழித் தோற்றம்/நுவலுழித் தோற்றம், குடிநிலை/துடிநிலை, கல்கோள்/கால்கோள், சீர்த்தகு மரபின்/சீர்த்தகு சிறப்பின்** என்பனவாகும்.

**நுவல்வழித் தோற்றம் / நுவலுழித் தோற்றம்**

**நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்**

**(தொல்.பொருள்.புறம்.இளம்.3:6)**

**நோயின்று உய்த்தல் நுவலுழித் தோற்றம்**

**(தொல்.பொருள்.புறம்.நச்சர்.3:6)**

வெட்சித்திணையின் துறைகளுள் ஒன்றான **நுவல்வழித் தோற்றம்** என்பதற்கு இளம்பூரணர் **"கவர்ந்த நிரையை வருந்தாமல் தமர் சொல்லிய வழி தோன்றுதல்"** (தொல்.பொருள்.புறம்.இளம்.நூ.3) என்றும், சோமசுந்தரபாரதியார் **"தம்மவர் புகழும்படி நிரைகொண்டார் மீளும் பொழிவு"**(தொல்.பொருள்.புறம்.புத்துரை.சோம.நூ.3) எனவும், வெள்ளைவாரணர் **"இன்ன இடத்து வருவோம் எனத் தாம் சொல்லிச் சென்ற வழியிடையே தம்மை எதிர்பார்த்து நிற்கும் தம்மவர் உளமகிழத் தோன்றலும்"** (தொல்.பொருள்.புறம்.உரைவளம்.வெள்ளை.நூ.3) என்றும் உரைக் கூறியுள்ளனர். இதில் கவர்ந்த நிரைகளை தமர் சொல்லியவாறு தம்மை எதிர்பார்த்து நிற்கும் தம்மவர் புகழும்படி உள்ளம் மகிழ தோன்றுதல் என்று குறிப்பிடுவது நிறை கவர்தல் என்னும் ஒரு நிகழ்வினையே என்பதைப் அறியமுடிகிறது.

ஆனால் இத்துறையை **நுவலுழித் தோற்றம்** எனக் கூறும் நச்சினார்க்கினியர் **"பாடி வீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவும், ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைமீட்டோர் வரவும்"**(தொல்.பொருள்.புறம்.நச்சர்.நூ.3) என்று நிரைகவர்தல், நிரை மீட்டல் என்னும் இரண்டு நிகழ்வுகளையும் இத்துறைக் குறிப்பதாகப் பொருள் கூறியுள்ளார். மேலும் நச்சினார்க்கினியர் கூறும் இப்பாடத்தை ஏற்கும் பாலசுந்தரம் அதற்கு இளம்பூரணர் கூறியவாறே உரையமைத்துள்ளார் என்பதை **"வெட்சி மறவர் தம் பாக்கத்தில் உள்ளோரும், இல்லத்தோரும்**

**உவந்துரைத்தற்கு இடனாக அவர் காண நிரையொடு தோன்றுதலாம்"**(தொல்.பொருள். புறம். காண்டிகையுரை.பால.நூ.3) என்ற விளக்கத்தின்வழிக் காணலாம்.

இவ்வாறு சொல்லில் மட்டுமன்றிப் பொருளிலும் உரையாசிரியர்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**குடிநிலை / துடிநிலை**

'**குடிநிலை**' என்பதற்கு **"வீரக்குடியின் பழைமையையும் அஞ்சாமையையும் கூறும் புறத்துறை"** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப.340) என்றும், '**துடிநிலை**' என்பதற்கு **"போர்க்களத்திலே மறவருடைய வீரம் மிகத் துடிகொட்டுதலைக் கூறும் புறத்துறை, வழிவழியாய்த் துடிகொட்டி வருபவனது குணங்களைப் புகழும் புறத்துறை"** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப.592) என்றும் தமிழ் தமிழ் அகரமுதலி பொருளுரைக்கின்றது.

**மறங்கடைக் கூட்டிய குடிநிலை (தொல்.பொருள்.புறம்.இளம்.4.1)**

**மறங்கடைக் கூட்டிய துடிநிலை (தொல்.பொருள்.புறம்.நச்சர்.4.1)**

இத்தொடர் மாற்றமும் வெட்சித் திணையின் துறைகளுள் ஒன்றாகும். '**மறங்கடைக் கூட்டிய குடிநிலை**' என்ற தொடருக்கு இளம்பூரணரும், வெள்ளைவாரணரும் **"மறத்தொழில் முடித்தலையுடைய குடியினது நிலைமையைக் கூறலும்"** (தொல்.பொருள்.புறம்.நூ.4) என்றும், சிவலிங்கனார் **"வீர உணர்வை வெற்றியில் முடிவு பெறுமாறு தூண்டிய குடிநிலையும்"** (தொல்.பொருள்.புறம்.நூ.4) என்றும் விளக்கம் கூறியுள்ளனர். இவ்விளக்கங்களில் குடிநிலை என்பது வீரக் குடியினது சிறப்பு என்னும் ஒரு பொருள் தோன்றவே நிற்கின்றது.

ஆனால் '**மறங்கடைக் கூட்டிய துடிநிலை**' என பாடங்கொள்ளும் நச்சினார்க்கினியர், சோமசுந்தரபாரதியார், பாலசுந்தரம், புலவர் குழந்தை ஆகிய நான்கு உரையாசிரியர்களும் முறையே **"போர்க்களத்து மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய துடிநிலையும்"** (தொல்.பொருள்.புறம்.நச்சர்.நூ.4), **"மிடல் மலிவால் அடல் விருப்பின் விளைந்த முரசு பரவுதலும்"** (தொல்.பொருள்.புறம்.சோம.நூ.4), **"போர் கருதி எழும் வயவர் தம் மறஉணர்வு ஒருங்கு முற்றக் கூட்டுதலையுடைய துடிநிலையும்"** (தொல்.பொருள்.புறம்.பால.நூ.4), **"போர்க் களத்து மறவரது மறத்தினை முற்றுவிக்கும் துடியினது நிலையைக் கூறுதலும்"** (தொல்.பொருள்.புறம்.குழந்தை.நூ.10) என்றவாறு உரை வகுத்துள்ளனர். மேலும் சோமசுந்தரபாரதியார் இச்சொல்லை கொடிநிலை என்றும் கையாண்டுள்ளார்.

இவற்றில் குடிநிலை, துடிநிலை என்னும் பாடவேறுபாட்டுக்கு ஏற்ப உரையும் வேறுபாட்டு இருப்பதைக் காணமுடிகிறது.

**கல்கோள்/கால்கோள்**

'**கால்கோள்**' என்பதன் பொருள் **“தொடக்கம், போரில் இறந்த வீரனுருவைக் கல்லில் வகுக்கத் தொடங்குதலைக் கூறும் புறத்துறை”** (தமிழ் தமிழ் அகரமுதலி.ப.316) என்பதாகும்.

வெட்சித்திணையின் துறைகளுள் ஒன்றான '**கல்கோள்**' என்பதற்கு இளம்பூரணரும், வெள்ளைவாரணரும் **“போர்க்களத்துப் பட்ட வீரருக்குக் கல்நிறுத்தற்காகக் கல்லைக் கண்டு அவ்வாறு காணப்பட்ட கல்லைக் கைக்கோடல்”** (இளம்.தொல்.பொருள்.புறம்.நூ.5) என்று பொருளுரைக்கின்றனர். இத்துறையை, கால்கோள் என மாற்றிப் பாடங்கொள்ளும் நச்சினார்க்கினியரும், புலவர் குழந்தையும் **“கல்லறுத்து இயற்றுதற்குக் கால்கோடலும், நாட்டிய பின்னர் அவன் ஆண்டு வருவதற்கு கால்கோடலும்”** (நச்சர்.தொல்.பொருள்.புறம்.நூ.5) என இருவகையாகப் பிரித்துப் பொருளுரைக்கின்றனர். சோமசுந்தரபாரதியார் **“தேர்ந்து கண்ட கல்லைக் கொணர்தல்”** என்றும், பாலசுந்தரம் **“பீடும்பெயரும் உருவும் பொறித்த கல்லினை நிறுத்துதற்குரிய இடத்தைக் கொளுவுதல். அஃதாவது மேடை அமைத்தல். கல்நடுதற்குரிய விழாக் கால்கோள் கொள்ளுதலும் இரட்டுற மொழிதலான் இதன்கண் அடங்கும்”** (தொல்.பொருள்.புறம்.நூ.5) என்றும் உரை கூறியுள்ளனர்.

இதில் சோமசுந்தரபாரதியார் இளம்பூரணர் கொண்ட பாடத்தை மட்டுமே மாற்றியுள்ளார் பொருளில் மாற்றம்கொள்ளவில்லை. ஆனால் பிற உரையாசிரியர்கள் பாடவேறுபாடு மட்டுமல்லாது உரைவேறுபாடும் கொண்டுள்ளனர். இப்பாடவேறுபாட்டினை,

**காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்**

**(தொல்.பொருள்.புறம்.இளம்.நூ.5:19)**

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**

**(தொல்.பொருள்.புறம்.நச்சர்.நூ.5:19)**

என்னும் புறத்திணையியல் அடிகளின் மூலம் அறியலாம்.

**சீர்த்தகு மரபின்/சீர்த்தகு சிறப்பின்**

'**மரபு**' என்பதற்கு '**முறைமை, சான்றோரின் சொல்வழக்கு முறை, பழைமை, வமிசம், பாரம்பரியம், இயல்பு, இலக்கணம், நல்லொழுக்கம், பெருமை, பாடு, நியாயம், வழிபாடு,**

**பருவம்**' (தமிழ் தமிழ் அகரமுதலி.ப.852) என்றும், '**சிறப்பு**' **என்பதற்கு** '**பெருமை, திருவிழா, செல்வம், அன்பளிப்பு, மதிப்பு, தலைமை, பகட்டு, இன்பம், ஒன்றற்கேயுரியது, வரிசை, போற்றுகை, மிகுதி, வீடுபேறு**' (தமிழ் தமிழ் அகரமுதலி.ப.466) என்றும் அகரமுதலி பொருளுரைக்கின்றது.

**சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று**

**(தொல்.பொருள்.புறம்.இளம்.நூ.5:20)**

**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று**

**(தொல்.பொருள்.புறம்.இளம்.நூ.5:20)**

என்ற தொல்காப்பியப் புறத்திணையியல் அடிகளில் '**சீர்த்தகு மரபில் பெரும்படை**' என்பதற்கு இளம்பூரணர் **"மிகவும் தக்க மரபினையுடைய பெரும்படை"** அதாவது நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ்செய்தல் (இளம்.தொல்.பொருள்.புறம்.நூ.5) என்று விளக்கம் கூறியுள்ளார். இக்கருத்தினையே வெள்ளைவாரணரும் குறிப்பிடுகின்றார். இதனை '**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை**' எனக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர், **"அவன் செய்த புகழைத் தகும்படி பொறித்தலும், அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புகளைப் படைத்தலும்"** (நச்சர்.தொல்.பொருள்.புறம்.நூ.5) என்று இருவகையாகப் பொருளுரைக்கின்றார்.

மேலும் சோமசுந்தரபாரதியார் **"சிறந்த முறையில் நாட்டிய கல்லுக்கு மிக்க பலியுணவு படைத்தல்"** (சோம.தொல்.பொருள்.புறம்.நூ.5) என்றும், பாலசுந்தரம் **"தெய்வத்தொடு ஒப்பச் சீர்பொருந்திய சிறப்பினான் அதற்குப் பெருமை செய்தல்"** (பால.தொல்.பொருள்.புறம்.நூ.5) என்றும் உரையமைக்கின்றனர். இதில் மரபு, சிறப்பு என்னும் இரண்டு சொற்களுக்கும் ஏற்ப அதன் பொருளும் மாறுபடுகிறது. மேலும் அத்துறைக்கான முழு விளக்கத்தையும் காணும்பொழுது நச்சினார்க்கினியரின் கருத்தும் இளம்பூரணர் போன்ற பிற உரையாசிரியர்களின் கருத்தும் வேறுபட்டு அமைந்துள்ளமையைப் பெறமுடிகிறது.

**முடிவுரை**

இக்கட்டுரையில் காட்டப்பட்டுள்ள சான்றுகளின்வழி புறத்திணையிலின் பெயர்க்காரணம்; அகத்திணைகளுக்குப் புறமாகும் புறத்திணைகள்; வெட்சித்திணை மற்றும் அதன் துறைகள் பற்றிய கருத்துகளை அறியமுடிகிறது. மேலும் வெட்சித்திணையின் துறைகளில் காணப்படும் குறிப்பிடத்தக்க பாடவேறுபாடுகள் பற்றியும், அவற்றினடிப்படையிலான உரை வேறுபாடுகள் பற்றியும் அறியமுடிகிறது. எனவே இத்தகைய ஆய்வுகள் பண்டைக்கால மற்றும் பிற்கால உரையாசிரியர்தம் உரைக்கோட்பாட்டினை மதிப்பிடும் களங்களை இனம்காட்டும் வகையில் அமையக்கூடும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

**துணைநூற்பட்டியல்**

மூலபாட ஆய்வியல் — அ.விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், முதற்பதிப்பு — நவம்பர் - 1978.

*Moolapada ayyviyal - A.Vinayagamoorthi, Balamurugan pathipagam, Mutharpathipu - November - 1978.*

திருக்குறள் ஆராய்ச்சி-1, யாப்பு அமைதியும் பாடவேறுபாடும் — மு.வரதராசனார்(ப.ஆ), மு.சண்முகம்பிள்ளை(ஆ), சென்னைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு - 1971.

*Thirukkural Arayechi-1, Yappu Amaithiyum Padaverupadum - M.Varatharasanar, M.Shanmugampillai, Chennai University, Mutharpathippu - 1971.*

தமிழ் தமிழ் அகரமுதலி - மு.சண்முகம்பிள்ளை(தொ.ஆ), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதற்பதிப்பு - சூன் 1985.

*Tamil Tamil Akaramuthali - M.Shanmugampillai, Tamilnattu padanool Niruvanam, Mutharpathippu - June 1985.*

தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம் பதினான்காம் பதிப்பு - 2016.

*Tholkappiyam Porulathikaram - Elampooranur Urai, Saratha Pathipagam, Pathinangam pathippu - 2016.*

தொல்காப்பியம் பொருளதிகாரம் — நச்சினார்க்கினியர் உரை, அமராவதி பதிப்பகம், முதற்பதிப்பு — 2017.

*Tholkappiyam Porulathikaram - Nachinarkkeniyar Urai, Amaravathi Pathipagam, Mutharpathipu - 2017.*

தொல்காப்பியர் பொருட்படலம் புறத்திணையியல் (புத்துரை) — ச.சோமசுந்தரபாரதியார், முதற்பதிப்பு — 1942.

*Tholkappiyar Porutpadalam Purathinaiyiyal (Puthurai) - S.Somasundarabharathiyar, Mutharpathippu -* ***1942.***

தொல்காப்பியம் புறத்திணையியல் (உரைவளம்) — க.வெள்ளைவாரணன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு — ***1983***
*Tholkappiyam Purathinaiyiyal (uraivalam) - K.Vellaivaaranaan, Madurai Kamaraj University, Mutharpathippu -* ***1983.***

தொல்காப்பியம் பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, அகத்திணையியல் & புறத்திணையியல் — ச.பாலசுந்தரம், தாமரை வெளியீட்டகம், முதற்பதிப்பு ***-1989.***
*Tholkappiyam Porulathikaram Aarayechi kaandikaiyurai, Akathinaiyiyal & Purathinaiyiyal - S.Balasundaram, Thamarai Velettagam, Mutharpathippu-1989.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com